RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

DOI: 10.34256/irjt22s722

# தி.ஜானகிராமனின் ‘நளபாகம்’ புதினத்தில் தனிமனித ஒழுக்கம்

**இரா. சங்கர்** [அ, *]

[அ] தமிழ்த்துறை, அரசு ஆடவர் கலைக் கல்லூரி, கிருஷ்ணகிரி-636701, தமிழ்நாடு, இந்தியா.

# Individual Morality in T. Janagraman's Novel 'Nalapagam'

**R. Sankar** [a, *]

[a] Department of Tamil, Government Arts College for Men, Krishnagiri-635001, Tamil Nadu, India

* Corresponding Author: rs9150094910@gmail.com

Received: 14-12-2021
Revised: 28-04-2022
Accepted: 10-05-2022
Published: 29-07-2022

Check for updates

**ABSTRACT**

T. Janagraman is of the opinion that they are responsible for his life. In the novel ‘Nalapagam’ the individual morality is explained as social morality through the character of Kameshwaran in this review article with relevant external and internal evidence. Man does not need to be touched on many occasions even one occasion creates a chance for a man to make a mistake. An example of this is illustrated in the Guru's life of Kameshwaran with nikanta introspection. Kameswaran, who has had a lifelong experience, is illustrated with appropriate acknowledgments that in his life, Rangamani avoids the life of sexual perversion caused by society's contempt for being childless by the way. Kameswaran's life events are explained with psychological evidence. The creativity of T. Janagraman is illustrated with relevant evidence from the point of view of the reviewer.

**Keywords:** T. Janagraman, Nalapagam, Moral, Kameshwaran

## முன்னுரை

சமூகத்தின் அடிப்படை அலகாக அமைபவர் தனிமனிதர் ஆவார். ஆகவே தான், ஒரு மனிதர் பிறக்கின்ற நாள் முதல் இறக்கின்ற நாள்வரை ஒழுக்கக்கூறுகள் அவருக்குக் கற்பிக்கப்பட்டுக் கொண்டே இருக்கின்றன. இவ்வாறு கற்பிக்கும் நிறுவனம் குடும்பமாகவோ, சமூகமாகவோ இருக்கலாம். மனிதர்கள் தலைமுறை தலைமுறையாகக் கற்றுணர்ந்த நடத்தை நெறிமுறையே ஒழுக்கவியல் என்னும் மதிப்புக்கு உட்படுத்தப்பட்டு, நாளடைவில் பண்பாடாக நிலை பெறுகின்றது. மேலும், இந்த ஒழுக்கக்கூறுகள் தனிமனிதருடைய நடவடிக்கைகளைக் கண்காணித்து, அவர் செல்கின்ற பாதையின் நன்மை தீமைகளை அவருக்கு உணர்த்துவனவாகவே அமைகின்றன. காலங்காலமாகச் சமூகத்திற்கும், தனிமனித மனத்திற்கும் இடையில் ஏற்படும் இந்த முரண்பாடுகளை இலக்கியங்கள் பதிவு செய்துள்ளன. அந்த வகையில், தி.ஜானகிராமனின் நளபாகம் புதினத்தில் காமேச்வரன் என்ற தனிமனித மனத்திற்கும், சமூக முரண்பாட்டிற்கும் ஏற்படும் சிக்கலை ஆராய்வது இவ்வாய்வுக் கட்டுரையின் நோக்கமாகும். நளபாகம் புதினம் ‘இலக்கிய சிந்தனை’[1] பரிசு பெற்றது (Janakiraman, 2008).

## காமேச்வரன்

நளபாகம் புதினத்தில் தலைமைப்பாத்திரமாக வரும் காமேச்வரன், சமையல் வேலை செய்கிறவனாக இருந்தாலும் பணம், புகழ், பெண்மோகம், சுகவாழ்வு என்று எதற்கும்

அடிமைப்பட்டுவிடாமல் உண்மையாகவும் ஒழுக்கமாகவும் சுதந்திரமாகவும் வாழ்வை நடத்த விரும்பும் மனிதனாக படைக்கப்பட்டுள்ளான் (Janakiraman, 2009).

சிறுவயதில் அம்மாவை இழந்த காமேச்வரன், சித்தி கொடுமையிலிருந்து விடுபட வீட்டைவிட்டு வெளியேறித் திருட்டு ரயிலேறுகிறான். பயணச்சீட்டுப் பரிசோதிப்பவரிடம் மாட்டிக்கொள்ளும் அவனை, வத்சன் என்பவர் காப்பாற்றித் தம்மோடு அழைத்துப் போகிறார். அவரைத் தன் குருவாக ஏற்கும் காமேச்வரன், அந்த யோகியிடமிருந்து சமையல் தொழிலையும் தேவி உபாசனையையும், கற்றுக் கொள்கிறான்.

தன் குருநாதர் வத்சன் போல், கட்டைப் பிரம்மச்சாரியாகக் காலம் தள்ளுவதற்குத் தேவைப்படும் ஆன்ம பலத்தை, அம்பாள் வழிபாட்டிலிருந்து பெற்று, ஒழுக்கத்தோடும் உண்மையோடும் அமைதியாகக் காமேச்வரன் வாழ்ந்து வருகிறான். வத்சனின் மறைவுக்குப் பிறகு யாத்திரை செல்லும் ரயிலில், தலைமைச் சமையல்காரனாகக் காமேச்வரன் பொறுப்பேற்கிறான்.

## ரங்கமணி

அந்தத் தலயாத்திரை ரயிலில் ரங்கமணி என்ற நடுத்தர வயதுடைய அம்மாள் வருகின்றாள். வாரிசு பிறக்காத பரம்பரையில், சுவீகாரப்பிள்ளையான காசநோயாளிக்கு வாழ்க்கைப்பட்டு, சில வருடங்களில் அவனையும் இழந்து விடும் ரங்கமணி, குடும்ப வழக்கப்படி துரையென்ற பிள்ளையைத் தத்தெடுத்து வளர்க்கிறாள். துரைக்கு பங்கஜம் என்ற பெண்ணைத் திருமணம் செய்து வைக்கிறாள். அவர்களுக்கும் குழந்தை பிறப்பதில்லை.

அதே தல யாத்திரை ரயிலில் ஜாதகங்களை ஆராயும் சோதிடர் முத்துசாமியிடம், துரை-பங்கஜம் ஜாதகங்களைக் கொடுத்துக் குழந்தை பலன் பற்றிக் கேட்கின்றாள். அவர் 'துரைக்குக் குழந்தை பாக்கியமில்லை, ஆனால் பங்கஜத்திற்கு உண்டு' என்று கூறுவதைக் கேட்டு முதலில் வேதனைப்படும் ரங்கமணி, பிறகு சோதிடர் பங்கஜத்திற்கு மட்டும் குழந்தை பாக்கியம் உண்டு என்று கூறியதைப் பற்றி யோசித்து ஒரு முடிவிற்கு வருகின்றாள்.

## ரங்கமணியின் திட்டம்

யாத்திரை ரயிலில் இளைஞனாகவும் பிரம்மச்சாரியாகவும் இருக்கின்ற தலைமை சமையல்காரன் காமேச்வரனின் தோற்றப்பொலிவும், அமைதியான பேச்சும், பண்பான நடத்தைகளும் அவள் மனத்தைக் கவர்கின்றன. தாய், தந்தையற்ற அவனைத் தன்னுடைய மற்றொரு வளர்ப்புப்பிள்ளையாகத் தன் வீட்டுக்கு வரும்படி பரிவுடன் வேண்டுகிறாள். தாயையும், வத்சனையும் இழந்த காமேச்வரன், அவர்களுடைய வடிவில் ரங்கமணியைக் காண்கிறான். ரங்கமணியின் மனத்தில் உள்ள திட்டத்தை அறியாமல், 'வளர்ப்புப்பிள்ளையாக இல்லாமல் சமையல்காரனாக மட்டுமே இருப்பேன்' என்ற நிபந்தனையுடன், ரங்கமணி வீட்டுற்கு வருகிறான். அங்கு வந்தபிறகு, ரங்கமணியின் மனத்திலுள்ளதை ரங்கமணியின் மருமகள் பங்கஜத்தின் நடவடிக்கைகளிலிருந்து புரிந்து கொள்வதற்கு அவனுக்குச் சில வாய்ப்புகள் ஏற்படுகின்றன.

வழி வழியாகச் சந்ததியற்ற ரங்கமணி குடும்பத்தில் தன்னால் பங்கஜத்தின் மூலம் சந்ததி தோற்றுவிக்க முற்படுவதற்குக் காரணம், பொதுவாகச் சமுதாயம் என்ற உருவற்ற அமைப்பு வாரிசற்ற குடும்பத்தை அங்கீகரிக்க மறுக்கும் விஷயம்தான் என்று புரிந்துகொள்கின்றான். குற்ற உணர்வு சிறிதுமின்றி, மன உறுதியுடன் ரங்கமணி இந்தக் காரியத்தில் முன்னின்று ஜோதிடத்தில் நம்பிக்கையும், சந்ததி வளர்ச்சியில் ஆர்வமும் ரங்கமணியை, மற்றவர்கள் விபரீதம் என்று கருதக்கூடிய செயலுக்குத் திட்டமிட வைத்துள்ளதை அறிகின்றான்.

ரங்கமணியின் எண்ணம் காமேச்வரனுக்கு அதிர்ச்சியை ஏற்படுத்துகிறது. எனினும் பங்கஜத்தின் அழகும், இளமையும், தனிமையும், நடத்தைகளும், அவனுடலில் சில சலனங்கள் ஏற்படக் காரணமாகின்றன. "எப்போதாவது வாரம், மாசம் என்று வரும் பத்திரிகைகளில் கதைகள் படித்ததுண்டு.

காதல்-காமம்-சிலது நன்றாக-அசட்டுப் பிசட்டென்று-என்னென்னவோ இருக்கும். அவனுக்குச் சஞ்சலம், ஏதும் அலைந்ததாக ஞாபகம் இல்லை. என்ன இது! இது என்ன மனித உடம்பா? மனித மனசா! எனக்கு இதற்கெல்லாம் நேரம் இல்லையா?" என்று குழம்பும் காமேச்வரனுக்குக் குரு வத்சனின் நினைவு வருகிறது (Janakiraman, 2009). ஒரு தருணத்தில் உடற்பசிக்கு இரையாகித் தனக்கு நோய் வந்ததும், அதிலிருந்து விடுபடப் பல இன்னல்களை அனுபவித்ததும், சமையல் தொழிலைக் கைவிட்டுக் கோயிலில் மடப்பள்ளியில் வேலை செய்தும் இடைவிடாது தேவி உபாசனையில் ஈடுபட்டு மீண்டதும் எண்ணி, தான் என்றும் ஒழுக்கமாக வாழ வேண்டும் என்னும் கொள்கையில் மனத்தளவில், எப்போதும்போல் அவன் உறுதியாய் நிற்கிறான். உடலில் ஏற்படும் பலகீனங்களை மனவுறுதி மூலம் வெல்ல காமேச்வரன் முனைகிறான்.

## காமேச்வரனின் மன உறுதி

நல்லது கெட்டதைப் பிரித்தறியும் சுய அறிவாலும், அம்பாள் வழிபாட்டில் மனத்தை ஒருமுகப்படுத்துவதாலும், அக்குழப்பத்தைக் காமேச்வரன் கடக்கிறான். அதற்குப் பிறகு, மனமும் உடலும் ஒன்றாக வாழும் தனிமனித ஒழுக்க வாழ்வே சிறந்தது என்ற உள்ள உறுதியை, அவன் தளர விடுவதில்லை. உடற்பசிக்காட்படாமல், ரங்கமணி திட்டத்திற்குப் பலியாகாமல், பங்கஜத்தை நல்வழிப்படுத்துகிறான்.

சூழலுக்கு அடிமைப்படாமல், துரை-பங்கஜம் வாழ்வில் இனிமை பிறக்கவும், தன் கொள்கைவாழ்வு கறைபடாமல் ஒளிரவும், காமேச்வரன் வழியேற்படுத்திக் கொள்கிறான். உடற்பசியிலிருந்து மீண்டபின் அவன், தன்னைச் சுற்றி நடக்கும் நிகழ்ச்சிகளைக் கூர்ந்து கவனித்து, பிறருக்குப் பயன்படும் வகையில், பொருளுள்ள வாழ்வை வாழவும் தீர்மானிக்கிறான். உள்ளம் விரிவடைந்தமையால் புறவாழ்விலும் அதே விரிவைத் தேடி, கொள்கைப்பிடிப்புமிக்க வாழ்வை வாழத் தொடங்குகிறான்.

பள்ளிக்கூடக் குழந்தைகளின் வயிற்றுக்குப் போதாத மதிய உணவுத்திட்டம் பற்றிக் கேள்விப்படும் காமேச்வரன், அதைப் போக்க தன்னாலான முயற்சிகளைச் செய்கிறான். இளைஞர்களான ஜகதுவையும் இளங்கண்ணனையும் துணைக்கழைத்துக் கொண்டு ஊர்ப் பெரியவர்களான தெலுங்குச்செட்டியார், துரை போன்றவர்களிடம் நன்கொடை பெற்றும், நல்லூர் வீடுகளில் 'பிடி அரிசி'த் திட்டத்தை நடைமுறைப் படுத்தி, பள்ளிக் குழந்தைகளின் பசிக்கொடுமையைத் தீர்ப்பதில், அவன் வெற்றி பெறுகிறான். இவ்வகையில் சமையல் கலைஞனாகவும் தேவி உபாசகனாகவும் இருந்த காமேச்வரன், அல்லும் பகலும் உழைக்கும், சமூகத் தொண்டனாகிறான்.

காமேச்வரன் நவராத்திரி பூஜைகளில் ஈடுபட்டு வேண்டிய வேண்டுதல்களாலும், நற்செயல்களாலும், அம்பாள் அருளாலும், துரை-பங்கஜம் தம்பதியருக்குக் குழந்தை பாக்கியம் உறுதியாகிறது. ஆனால் அதற்குக் காமேச்வரனே காரணமென்று, நல்லூரில் வதந்தி பரவுகிறது. கொஞ்சமும் நியாயமற்ற இப்பழிச் சொல்லால், காமேச்வரன் மனம் காயப்படுகிறது. சோதிடர், முத்துசாமியைத் தேடி அவன் போகிறான். நடந்ததைக் கேட்டு மனம் வருந்தும் சோதிடர், தம் சோதிடம் பொய்த்ததையும் காமேச்வரனின் குற்றமற்ற தன்மையையும், ஒப்புக்கொள்கிறார். இது காமேச்வரனுக்குச் சற்று ஆறுதலளிக்கிறது. "நான் அந்தத் துரைக்குக் குழந்தை பிறக்கணும்னு என் ஜீவ சக்தி எல்லாத்தையும் குவிச்சி வேண்டிண்டேன். அதனால்தான் அந்தப் பெண் உண்டானதாக எனக்குச் சர்வ நிச்சயம்" என்று சோதிடரிடம் காமேச்வரன் கூறுவதிலிருந்து, அவனது சுயநலமற்ற பரிசுத்தமான உள்ளத்தை அறியலாம் (Janakiraman, 2009).

காமேச்வரனின் தெய்வீக உணர்வுகளையும், சமூக அக்கறையையும், கொள்கை வாழ்வையும் சரியாகப் புரிந்து கொள்ளும் சோதிடர் முத்துசாமி, தம்முடன் வாழ வந்துவிடும்படி அவனையும் அழைக்கிறார். குழந்தையில்லாத தமக்குப் பிள்ளையாகவும், குருவாகவும், சீடனாகவும், தோழனாகவும், சமையல்காரனாகவும், எல்லாமாகவும் இருக்கும்படி வேண்டுகிறார். ஆனால் அதற்குக் காமேச்வரன் இசைவதில்லை.

அவர் அவனைத் திருமணம் செய்து கொள்ளச் சொல்கிறார். ஆழ்ந்து சிந்தித்த பிறகு, முத்துசாமியின் கருத்தில் உள்ள நியாயத்தைக் காமேச்வரன் மனம் ஏற்கிறது. தனிக்கட்டை வாழ்வை விடுத்துத் திருமணம் செய்ய முடிவெடுத்துக் காமேச்வரன், பங்கஜத்தின் பெயருக்குத் தன்னால் ஏற்பட்ட களங்கத்தைப் போக்க விரும்பித் திருமண வாழ்விற்கு இசைகிறான். உடலின் தேவைகள் நிறைவு செய்யப்படாமல் போனால், என்றாவது ஒருநாள் வத்சனுக்கு ஏற்பட்டது போன்ற முறைகேடான அனுபவம் தனக்கும் ஏற்படலாம் என்று அவன் உணர்வதும், இம்முடிவிற்குக் காரணமாகிறது.

## உளவியல் பார்வை

காமேச்வரனின் இந்தத் தனிமனித ஒழுக்கம் நளபாகம் புதினம் முழுக்க தனித்து நிற்பதற்கான காரணம் இளம் வயதில் தாயை இழந்தும், தந்தையின் அரவணைப்பை இழந்தும், அனாதையாக ஊர் ஊராக அலைந்து கொண்டிருக்கும்பொழுது தேவி உபாஸனை பக்தர் வத்சனுடைய அரவணைப்பும் அவருடைய வாழ்க்கை முறையும் என்பதை அறியலாம்.

வத்சனுடைய அரவணைப்பு, “சிறார்ப் பருவத்தில் தந்தையின் பாதுகாப்புக்கான தேவையைப் போல வலுவான தேவை எதையும் என்னால் நினைத்துப் பார்க்க முடியவில்லை” என்ற ப்ராய்ட் கூற்றுப்படி காமேச்வரன் இளவயது வாழ்க்கை தந்தையிடமிருந்து எதிர்பார்த்த பாதுகாப்பான வாழ்க்கை கிடைக்காதபோது வீட்டை விட்டு வெளியேறி, பல்வேறு இடங்களில் வேலை செய்து அடியும், உதையும் பட்டபிறகு வத்சனிடம் கிடைத்த அடைக்கலம்தான், அவன் வாழ்க்கையில் பாதுகாப்பாக இருப்பதை உணர முடிவு செய்கிறது (Mani, 2001). அதனால் மறுபடியும் சொந்த வீடு செல்லாமலும், பல்வேறு இடங்களுக்குச் சென்று அடி வாங்க முடியாமலும், அவருடன் இருப்பதே தனக்குப் பாதுகாப்பான வாழ்க்கை என்று முடிவு செய்து விடுகிறான். மேலும் அவரைத் தன் குருவாக ஏற்றுக் கொள்வதற்கும், அவருடைய பக்தி மார்க்கத்தை, தேவி உபாசனை மார்க்கத்தை, தன் வாழ்க்கை மார்க்கமாக ஏற்றுக் கொள்வதற்கும் காரணமாக இருந்தது என்பதை அறியலாம்.

“தனிமனிதன் அடக்கிவிட்ட தற்புனைவுகளோ. எண்ணங்களோ, பாலியலின் உத்வேகங்களோ வெளித்தோன்றுவதிலிருந்து ஈகோவைப் பாதுகாக்கும் வழிகள் மட்டுமல்ல, மேலும் அதே நேரத்தில் அவை அந்த உத்வேகங்களின் இடம்பெயர்ந்த, பகுதியளவான வெளிப்பாடும் ஆகும்” என்ற ப்ராய்ட் கருத்துப்படி காமேச்வரன் ரங்கமணியின் திட்டத்தை அறிந்த பொழுதும் பங்கஜத்தின் வாளிப்பில் நெஞ்சம் தடுமாறுகிறான் (Mani, 2001). ஆனால் அவனுடைய தனி மனித ஒழுக்கம் என்ற உணர்வு ஈகோ உணர்வு அவனை மட்டுப்படுத்துகிறது. அதிலிருந்து தப்பிக்க மதிய உணவு திட்டத்தின் செயல்பாடுகளை ஊர் மக்களின் ஒத்துழைப்புடனும் முனைப்புடனும் எந்நேரமும் ஈடுபடுவதால் சலனப்படாமல் தப்பித்து விடுகிறான்.

“பக்தியுள்ள மனிதர்கள், தங்கள் பாவ மன்னிப்பு பிரார்த்தனைகளில் தங்களைக் குற்றம் புரிந்த பாவிகள் என்று ஒப்புக் கொள்கிறார்கள். அதன் காரணமாக அவர்கள் சடங்குபூர்வமான வினைமுறைகளைச் சபலத்திற்கு எதிரான பாதுகாப்பாகவும், வெடித்து வெளிவர அச்சுறுத்திக் கொண்டிருக்கும் இயல்புணர்ச்சி சார்ந்த ஆற்றல்களைக் கட்டுப்படுத்தும் அல்லது தடுத்து விளக்கும் ஒரு வழியாகும் மேற்கொள்ளத் தேவைப்படுகிறது” என்ற உளவியல் கூற்றுப்படி வத்சன் சமையல் தொழிலில் ஈடுபட்டு ஓய்வு நேரங்கள் இருக்கும்பொழுது ஒரு நாள் வழி தவறியதால் மிகப்பெரிய நோயாளியாகிறார் (Mani, 2001). அத்துடன் ஆள் வைத்துச் சமையல் செய்யும் வேலையைக் கைவிட்டு கோயிலில் மடப்பள்ளி சேவை செய்து முழுக்க முழுக்க மனதைப் பக்தி வழியில் செலுத்துகிறார் அதிலிருந்து நிரந்தரமாகத் தப்பிப்பதற்குத் தேவி உபாசனையைக் கையாளுகிறார்.

அவருடன் இருந்த காமேச்வரன் குருவின் வழியைப் பின்பற்றுகிறார். தனக்கும் அப்படியொரு சூழல் ஏற்படக் கூடாது என்று குருவின் வழியிலே நவராத்திரி விழாவைக் கொண்டாடுவதன் வழியாகவும் தன் தனிமனித ஒழுக்கத்திற்கு எவ்வித கெடுதலும் ஏற்படாமல் பார்த்துக் கொள்கிறான்.

## திறனாய்வாளர் பார்வை

சமுதாயத்தில் காமேச்வரன் சந்திக்கும் சூழல் பலர் சந்தித்து இருப்பதை தி.ஜானகிராமன் உள்ளபடி படைத்திருந்தால் மலினமான இலக்கியமாக இருந்திருக்கும். “தன்னுடைய குருவான வத்ஸன் கூட உடற்பசியால் பாதிக்கப்பட்டவர் என்ற அதிரச் செய்யும் உண்மையும் இந்த விநோத சூழ்நிலைக்கு உதவுவதுபோல் முதலில் தோன்றுகிறது. இந்தக் கட்டத்தை மிகவும் நளினமான கலையுணர்வுடன் கையாளும் ஜானகிராமன் மனித இயல்பின் ஆழ்ந்த அடிப்படை ரகசியங்களை உளவியல் ஆய்வுப் பாங்கில் வெளிப்படுத்துவது, மிகவும் சாதாரணமாகத் தோன்றும் இந்த நாவலுக்கு ஒரு இலக்கியத்தரம் கொடுத்து விடுகிறது. எழுத்தாளன் சிறந்த கலைஞனாக உருவெடுக்கும் நிலை இந்தக் கதையில் தெளிவாகிறது. மற்ற நாவல்களுள் காணப்படாத ஓரளவு சமுதாயச் சூழலும் இந்தக் கதைக்கு வளம் கொடுக்கிறது” என்று சிட்டி குறிப்பிடுவதிலிருந்து, காமேச்வரன் அச்சூழலை வெல்வதால்தான் அக்கதை இலக்கிய தரமாகிவிட்டது என்று படைப்பாளுமையைப் போற்றுகின்றார் (Janakiraman, 2009).

காமேச்வரனின் பாத்திரப்படைப்பு குறித்து, “உன்னத நோக்கங்களின் துணையுடன், தெய்வ பக்தியின் பலத்துடன், உத்தம வாழ்வு வாழ்ந்து வெற்றி பெற வேண்டுமென்றும் விரும்பும் காமேச்வரன் ஒரு சமையல்காரன்தான், நளபாகக்கலையில் தேர்ச்சி பெற்ற காமேச்வரனுக்கு ஒரு மகானின் உபதேசம் கிடைத்ததின் பலனாக அவன் தன்னுடைய கர்மாவிலேயே திருப்தி கண்டு பூரணத்துவம் அடைகிறான். ரயிலில் தல யாத்திரை மேற்கொண்ட சில பயணிகளின் வயிற்றுப்பசியைத் தீர்த்து வைக்கும் காமேச்வரனுக்குத் தேவையற்ற உடற்பசி ஏற்படுவதற்கான சூழ்நிலை உருவாகும்போது அவனுடைய ஆத்மஞானம் துணை செய்கிறது” என்று சிட்டி கூறுவதிலிருந்து, காமேச்வரனின் கொள்கைப்பிடிப்பின் சிறப்பையும், நெறிசார்ந்த வாழ்வின் பெருமையையும் அறியலாம் (Janakiraman, 2009).

## முடிவுரை

தனி மனித ஒழுக்கம் சமுதாயத்தின் ஒழுக்கமாகும். காமேச்வரனுடைய தனிமனித ஒழுக்கம் அவன் வாழ்வையும், ஒரு பெண்ணுடைய வாழ்வையும் காப்பாற்றுகிறது. சமூகத்தில் குழந்தை இல்லாத குடும்பங்களைப் போற்றாத இந்தப் போலியான சமூகம், அதற்காக நடைபெறக்கூடிய விபரீத முயற்சிகள் விளக்கப்பெற்று எந்தச் சூழ்நிலையிலும் மனிதன் தன்னுடைய ஒழுக்கத்திலிருந்து தவறாமல் இருப்பதே அவன் சமுதாயத்திற்கு செய்யக்கூடிய மிகப்பெரிய தொண்டாகும் என்று தி.ஜானகிராமன் அவற்றின் வழியே நளபாகம் புதினத்தின் வழியே வெளிப்படுத்தி உள்ளார் என்பதை அறியலாம்

## References

Janakiraman, T., (2008) Janakiraman Padaippukal Katturaikal, Volume 2, Ainthinai Pathippagam, Chennai, India.

Janakiraman, T., (2009) Nalapagam, Ainthinai Pathippagam, Chennai, India.

Mani, C., (2001) Freud Migasurukamana Arimugam, Adaiyalam Pathippagam, Tirchy, India.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License